**மாவட்ட நீதிமன்றம், உதகமண்டலம்**

O.S. No. 85 of 2024

**வா.சா.1 ஸ்ரீதர் இன்று 21.04.2026 அன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, 2ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்**

**குறுக்கு விசாரணை :**

தாவா கிரைய ஒப்பந்த பத்திரம் எனக்கும் முதல் பிரதிவாதி குணசேகரனுக்கும் இடையில் ஏற்படுத்தப்பட்டது என்பது சரி. மொத்த கிரைய தொகை ரூபாய் 21,00,000/–ல் குணசேகரனுக்கு நான் இதுவரை மொத்தம் ரூபாய் 6,00,000/– முன் தொகையாக கொடுத்துள்ளேன் என்பது சரி. குணசேகரனும் 2ஆம் பிரதிவாதி மனோகரனும் நல்ல நண்பர்கள் என்றால் எனக்கு அது தெரியாது. குணசேகரன் ஊரில் இல்லாததத்தினால் நான் ரூபாய் 5,00,000/– தொகையை தாவா கிரையத்திற்காக ஒரு பகுதி தொகையாக குணசேகரன் கூறியதன்பேரில் 2ஆம் பிரதிவாதி மனோகரனுக்கு கொடுத்தேனா என்றால் மனோகரன் வந்து என்னிடம் நேரடியாக அந்த தொகையை கேட்டதால் நான் நம்பிக்கையின் பேரில் மனோகரனிடம் தாவா கிரையம் தொடர்பாக ஒரு பகுதி தொகையாக கொடுத்தேன். குணசேகரன் கூறாமல் நான் அந்த தொகையை 2ஆம் பிரதிவாதிக்கு கொடுத்திருக்க வாய்ப்பில்லை என்றால் அந்த நிலத்தை எனக்கு காண்பித்ததே 2ஆம் பிரதிவாதிதான் என்பதால் நம்பிக்கையின் பேரில் நான்

குணசேகரனை கேட்காமலேயே கொடுத்துவிட்டேன். நான் அவ்வாறு மனோகரனுக்கு பணத்தை கொடுத்த விவரத்தை குணசேகரனுக்கு தெரியபடுத்தினேனா என்றால் இல்லை.

நான் 20.05.2015 அன்று குணசேகரன் ஊரில் இல்லாததால் அவர் அறிவுறுத்தியதன் பேரில் மனோகரனிடம் மேலும் ரூபாய் 5,00,000/– தொகையை கொடுத்தேன் என்றால் இல்லை, குணசேகரன் இது பற்றி எதுவும் கூறவில்லை, மனோகரன் வந்து என்னிடம் நேரடியாக கேட்டதன் பேரில் நானே அந்த தொகையை கொடுத்தேன். 20.05.2015 அன்று ரூபாய் 5,00,000/– மனோகரனிடம் கொடுத்த பிறகும் நான் குணசேகரனுக்கு இது பற்றி இதுவரை மனோகரன் என்னிடம் ரூபாய் 10,00,000/– பெற்றுள்ளார் என்ற விவரத்தை தெரியபடுத்தினேனா என்றால் இல்லை, மனோகரன்தான் அந்த நிலத்தை காண்பித்து அந்த ஏற்பாடுகள் அனைத்தையும் செய்ததால் இந்த விவரத்தை குணசேகரனுக்கு தெரியபடுத்த வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

குணசேகரன் ஊர் திரும்பிய பிறகு அந்த பணம் ரூபாய் 10,00,000/– மனோகரன் 15.06.2015 அன்று குணசேகரனிடம் கொடுத்துவிட்டார் என்றால் எனக்கு அதை பற்றி தெரியாது. நான் 1ஆம் பிரதிவாதிக்கு அனுப்பிய வா.சா.ஆ–2 அறிவிப்பில் தாவா கிரையம் தொடர்பாக முதலில் ரூபாய் 6,00,000/–ஐயும் பிறகு

மேற்கொண்டு ரூபாய் 10,00,000/—ஐ மனோகரன் மூலமாகவும் நான் கொடுத்துவிட்டதாகவும் எனவே மீத கிரைய தொகையை பெற்றுக்கொண்டு கிரையத்தை முடித்து கொடுக்கும்படிக்கும் கேட்டிருந்தேன் என்பது சரி. உண்மையில் குணசேகரன் மேற்படி தொகை ரூபாய் 10,00,000/—ஐ மனோகரனிடம் இருந்து பெற்ற விவரம் எனக்கு தெரியும் என்றும் நான் வேண்டுமென்றே மறைக்கிறேன் என்றும் சொன்னால் தவறு.

தற்பொழுது என்னிடம் காட்டப்படும் தாவா கிரைய ஒப்பந்த பத்திரத்தில் காட்டப்படும் கையொப்பம் குணசேகரனுடையது என்பது சரி. தற்பொழுது என்னிடம் காண்பிக்கப்படும் 15.06.2015 தேதியிட்ட ரசீதில் உள்ள கையொப்பம் குணசேகரனுடையதுதான் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. நான் அனுப்பிய வா.சா.ஆ—2 அறிவிப்பிற்கு குணசேகரனிடம் இருந்து எந்த பதிலும் வரவில்லை. குணசேகரன் அந்த பணத்தை வாங்கிக் கொண்டுவிட்டதால்தான் எனக்கு பதில் அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை என்றும், இல்லையென்றால் பதில் அனுப்பியிருப்பார் என்றும் சொன்னால் தவறு. வா.சா.ஆ—3 அறிவிப்பை மனோகரனுக்கு 23.02.2016 அன்று நான் அனுப்பியதற்கும் ஒரு வாரத்திற்கு முன்புதான் அவர் நான் கொடுத்த ரூபாய் 10,00,000/—ஐ குணசேகரனுக்கு கொடுக்கவில்லை என்ற விவரம் தெரியவந்தது. குணசேகரனுக்கு பணம் ரூபாய் 10,00,000/—ஐ மனோகரன் கொடுக்கவில்லை

என்பதை எப்படி தெரிந்துகொண்டேன் என்றால் மனோகரன் என்னிடம் ஒருமுறை பேசும்போது தனக்கு குணசேகரன் கொடுக்க வேண்டிய பணத்திற்காக அந்த பணம் ரூபாய் 10,00,000/-ஐ தானே வைத்துக்கொண்டதாக என்னிடம் சொன்னதை வைத்து நான் தெரிந்துகொண்டேன். அது உண்மையா என்பது எனக்கு தெரியவில்லை. நான் இந்த விவரத்தை மனோகரனுக்கு அனுப்பிய வா.சா.ஆ-3 அறிவிப்பில் சொன்னேனா என்றால் எனக்கு அப்பொழுது தீர்மானமாக அது தெரியவில்லை என்பதால் நான் அதை சொல்லவில்லை. இந்த விவரத்தை நான் வழக்குரை மற்றும் என் நிருபண பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்பது சரி. எனக்கு அது தீர்மானமாக தெரியவில்லை என்பதால் நான் இந்த விவரத்தை அவற்றில் சொல்லவில்லை. நான் வழக்கிற்காக அவ்வாறு மனோகரன் தனக்கு குணசேகரன் தர வேண்டிய பணத்திற்காக ரூபாய் 10,00,000/-ஐ தானே வைத்துக்கொண்டதாக சொன்னதாக பொய்யாக கூறுகிறேன் என்றால் தவறு.

நான் குணசேகரன் மற்றும் மனோகரன்மீது 2016ல் காவல் நிலையத்தில் என்னிடம் பணம் பெற்றுக்கொண்டு கிரையத்தை முடித்து கொடுக்க மறுப்பதாக கூறி புகார் கொடுத்திருந்தேன் என்பது சரி. போலிசார் அது சம்பந்தமாக நடத்திய விசாரணையில் பிரதிவாதிகள் ஆஜராகி தாவா கிரையம் தொடர்பாக ரூபாய் 10,00,000/- தொகையை முதல் பிரதிவாதி பெற்றுக்கொண்டதாக

ஒப்புக்கொண்டு தற்பொழுது என்னிடம் காண்பிக்கப்படும் ரசீதை காண்பித்தார்கள் என்றும் அதன் நகல் ஒன்றும் என்னிடம் கொடுக்கப்பட்டிருந்தது என்றும் அதை ஏற்றுக்கொண்டுதான் போலிசார் என் புகார் பேரிலான விசாரணையை முடித்தார்கள் என்றும் சொன்னால் தவறு. அந்த தொகை ரூபாய் 10,00,000/-ஐ தலா ரூபாய் 5,00,000/- என்று மனோகரன் என்னிடம் பெற்றுக்கொண்டது தொடர்பாக தாவா கிரைய ஒப்பந்த பத்திரத்திலும் அந்தந்த தேதிகளில் Endorsement செய்யப்பட்டுள்ளது என்றும், அந்த பணத்தை குணசேகரனிடம் அவர் கொடுத்தபோது அதற்காக மனோகரன் ரசீதும் பெற்று வைத்துள்ளார் என்றும் சொன்னால் தவறு. குணசேகரன் தனக்கு மனோகரன் அந்த பணம் ரூபாய் 10,00,000/-ஐ கொடுக்கவில்லை என்று காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுத்தாரா என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. உண்மையில் குணசேகரன் அந்த பணத்தை மனோகரனிடம் பெற்று கொண்டுவிட்டதால்தான் மனோகரன் மீது காவல் நிலையத்தில் இது சம்பந்தமாக புகார் கொடுக்கவில்லை என்றால் தவறு. வா.சா.ஆ-2, வா.சா.ஆ-3 அறிவிப்புகளை 2016ஆம் ஆண்டிலேயே அனுப்பியிருந்தும் நான் வழக்கை உடனடியாக தாக்கல் செய்யவில்லை என்பது சரி. நான் 8 வருடங்கள் கழித்துதான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கை சட்டப்படி ஏற்க இயலாது என்றால் தவறு.

நான் கோரியுள்ள வட்டி தொகை கொடுப்பதாக இருந்தாலும் அதை 1ஆம் பிரதிவாதிதான் எனக்கு கொடுக்க கடமைப்பட்டவர் என்றும் 2ஆம் பிரதிவாதி எனக்கு எந்த ஒரு தொகையும் செலுத்த கடமைப்பட்டவர் அல்ல என்றும் சொன்னால் தவறு. 1ஆம் பிரதிவாதி ஊரில் இல்லை என்பதும் அவர் எங்கு இருக்கிறார் என்பது தெரியவில்லை என்பதும் சரி. அதனால்தான் தொகையை எப்படியாவது வசூல் செய்துவிடவேண்டும் என்ற எண்ணத்தில் 2ஆம் பிரதிவாதியையும் சேர்த்து இந்த வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் தவறு. தாவா கிரைய ஒப்பந்த பத்திரம் எனக்கும் 1ஆம் பிரதிவாதிக்கும் இடையில் மட்டுமே ஏற்பட்டுள்ளது என்பதாலும் அதில் 2ஆம் பிரதிவாதி ஒரு சாட்சியாக மட்டுமே கையொப்பம் இட்டுள்ளார் என்பதாலும் எனக்கும் 1ஆம் பிரதிவாதிக்கும் இடையில் என்ன நடந்தது என்ற விவரங்கள் 2ஆம் பிரதிவாதிக்கு தெரியாது என்றும் சொன்னால் தவறு. 2ஆம் பிரதிவாதி என்னிடம பெற்ற மேற்படி தொகை ரூபாய் 10,00,000/–ஐயும் 1ஆம் பிரதிவாதிக்கு அவர் கொடுத்துவிட்ட விவரம் எனக்கு நன்கு தெரியும் என்றும் இருப்பினும் பொய்யான விவரங்கள் கூறி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் தவறு.

1ஆம் பிரதிவாதியின் சொத்துமீது நடவடிக்கைகள் ஏன் மேற்கொள்ளவில்லை என்றால் அந்த சொத்தின்மீது ஏற்கனவே மற்றொரு கிரைய ஒப்பந்த பத்திரம் உள்ளது என்ற விவரம் எனக்கு பின்னிட்டு தெரியவந்ததால் நான் அந்த நடவடிக்கைகள்

எடுக்கவில்லை. 2ஆம் பிரதிவாதி இவ்வழக்கு தொடர்பாக எனக்கு யாதொரு தொகையும் செலுத்த கடமைப்பட்டவர் அல்ல என்பதால் இவ்வழக்கை 2ஆம் பிரதிவாதியை பொறுத்து தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் தவறு.

<u>**மறு விசாரணை**</u> : இல்லை.

A. Muraleedharan

Digitally signed by A. Muraleedharan
Date: 2026.04.21 17:12:26 +0530